*1996 பிப்ரவரி 23]*

வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த அதிகாரிகள் எங்களைக் கலந்துகொண்டு சில தகவல்களைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், மேலும் அந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுத்தால் அதை அரசு பரிசீலிக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே வினாக்கள் வைக்கப்படும்போது நிர்வாகத்திலே இருந்து சரியான பதில்களைப் பெற்றுத் தருவது அரசின் கடமையாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்துதான் பதில் இங்கே வரவேண்டுமென்று சொன்னால் அது நிர்வாகமாக இருக்காது. அது ஓர் ஆலோசனைக் குழுவாக மாறிவிடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல்கள் வேண்டுமென்றால் உரிய அதிகாரிகளிடத்திலே தெரிந்து கொள்ளலாம், அல்லது அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்து கொள்ளலாம், அல்லது துறையிலே யாரை வேண்டுமானாலும் சந்தித்து தேவையான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வளவு வாய்ப்புகள் இருக்கின்றபோது, ஒரு ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்களுக்கு, சட்டமன்றத்திலே இதைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை இல்லை. அந்தப் பள்ளியை தரம் உயர்த்துவதற்கு உரிய முறையில் கருத்துருக்கள் வரப்பெறுமானால் 'நிதி உதவியின்றி நாங்கள் நடத்துகிறோம்' என்று வருமானால் அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**113--**

**நவோதயா பள்ளிகள் திறத்தல்**

***87529--திரு. ஆ. சுப்புரத்தினம்:***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் திறப்பது குறித்து ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[*1996 பிப்ரவரி 23*

**மாண்புமிகு பேராசிரியர், க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்,** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இது பற்றி மைய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. அவ்வரசிடமிருந்து இதுவரை எந்த முடிவும் வரவில்லை.

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் திறக்க இயலாமைக்கு தனிப்பட்ட காரணங்கள் ஏதேனும் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் திறக்காததற்கு தனிப்பட்ட காரணங்கள் ஏதும் இல்லை. ஆனால் பொதுவான காரணங்கள் உண்டு. மக்கள் பிரச்சினை உண்டு. மற்ற மாநிலங்களில் உள்ள நவோதயா பள்ளிகள் பின்பற்றும் நடைமுறைகளை அப்படியே நீங்கள் பின்பற்றுங்கள், நாங்கள் நவோதயா பள்ளிகளைத் தருகிறோம், நீங்கள் தொடங்குங்கள் என்று மத்திய அரசு அறிவித்தது. ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள்; அறிவியலிலும், கணிதத்திலும் ஒன்பதாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்றுக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள்; சமூகவியலில் ஒன்பதாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரையிலும், மானிடயியலில் பதினொன்று, பன்னிரெண்டு வகுப்புகளிலும் 'ஹிந்தி' பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை ஹிந்தி ஒரு கட்டாயப் பாடமாக இருக்க வேண்டுமென்று நிபந்தனை வைத்திருக்கிறார்கள். இது நமக்கு ஏற்புடையதல்ல. 23-1-1968-ல், இதே மாமன்றத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் நிறைவேற்றிய இரு மொழித் திட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் தொடரப்பட்டது. இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நவோதயா பள்ளிகளிலே மும்மொழித் திட்டம் என்று சொல்கிறார்கள். நாம் இரு மொழித் திட்டத்தினை கடைப்பிடித்து வருகிறோம். இந்த மாநிலத்தின் செயல்பாடுகளுக்கு இது ஒத்துவராது என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் அமைச்சருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, கடிதம்

*1996 பிப்ரவரி 23*]

எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஆகவே, நவோதயா பள்ளிகளை தமிழகத்திலே தொடங்கக்கூடிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவோதயா பள்ளிகளைத் தொடங்கும் மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது. நம்முடைய உயிர்க் கொள்கையான மொழிக் கொள்கையைப் பின்பற்றக்கூடிய இன்றைய சூழ்நிலையில், நம்முடைய 'இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியைப் பின்பற்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழியைப் பின்பற்றி, மிகத் திறம்பட இரு மொழிக் கொள்கையைக் கையாண்டு வருகிறார்கள். அந்தப் பள்ளிகளைத் திறக்காததன் காரணமாக மத்திய அரசு வழங்கக் கூடிய நிதி உதவியை நாம் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, மொழிக் கொள்கையையும் காப்பாற்றி, இந்த நிதியையும் பெறுவதற்கு மாற்று வழி ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு மாற்று வழி எதுவும் இல்லை. ஆனால் இந்த நவதோயா பள்ளிகளிலே எந்த வகையான பாடப் பிரிவுகள் இருக்கின்றனவோ, எந்த வகையான கல்வி கற்பிக்கப்படுகிறதோ அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'ஸ்கூல் ஆஃப் எக்செலன்ஸ்' என்கிற "சீர்மிகு உயர்நிலைப் பள்ளியை" முதன்முதலாக தமிழகத்திலே தொடங்கி இருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு நிதி உதவி தருவது இல்லை. இந்த "ஸ்கூல் ஆஃப் எக்செலன்ஸ்" இப்போது தர்மபுரியிலே நடைபெற்று வருகிறது. தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இதைச் செயல்படுத்தலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. ஆனால், கல்வியாளர்களை அழைத்துப் பேசியபோது, பர்கூரிலே தொடங்கப்பட்ட பள்ளி எவ்வாறு நடைபெறுகிறது என்பதை இன்னும் இரண்டு ஆண்டுகள் பார்த்து, பரிட்சார்த்தமாக இதைக் கவனித்து, அதன் அடிப்படையிலே மற்ற மாவட்டங்களிலும் தொடங்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தமிழும் ஆங்கிலமும் மட்டுமுடைய இரு மொழிக் கொள்கையை அப்படியே ஏற்றுக் சொண்டிருக்கிற 'ஸ்கூல் ஆஃப் எக்செலன்ஸ்'– 'சீர்மிகு உயர்நிலைப் பள்ளி' இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிலர் இரு மொழிக் கொள்கையை அரசு கை

விட்டுவிட்டது என்றுகூட ஒரு சில நேரங்களிலே சொன்னார்கள். தமிழை எல்லோரும் படிக்கின்ற வாய்ப்பை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கவேண்டுமென்று குரல் கொடுத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இப்போது இருக்கின்ற நர்சரி பள்ளிகளிலேகூட தமிழைக் கட்டாயமாகப் படிக்கவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தியை எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதன் அடிப்படையில் இருமொழித் திட்டம்தான் நம்முடைய உயிர்க் கொள்கையாக இருக்கிறது என்பதன் அடிப்படையில் தமிழ் மக்கள் ஆர்வத்தையும், அவர்களது எதிர்பார்ப்பையும் ஏற்று இந்த அரசு நவோதயா பள்ளிகளை இங்கே தொடங்கவில்லை. அதற்கு மாற்றாக, பரீட்சார்த்தமாக ஒரு சீர்மிகு உயர் பள்ளி தொடங்கப்பட்டு இருக்கிறது.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராதவர்கள்கூட தமிழைப் படிக்காமல் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிற இந்தச் சூழ்நிலையை அரசு அறியுமா? இவ்வாறு இருக்க நவோதயா பள்ளிகளைத் தமிழ்நாட்டில் துவங்காததன் காரணமாக ஏற்பட்டிருக்கிற இழப்பினை எண்ணிப்பார்த்து, நவோதயா பள்ளிகளை மீண்டும் துவங்குவதோடு, இந்தச் சீர்மிகு பள்ளிகள் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்று சொல்லப்பட்டாலும், இதுவரை ஒரு பள்ளிதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதுகூட எந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. ஆகவே, இந்தியை அரசு வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளவில்லையேயொழிய மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலே இந்தி சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் யாரும் மறுக்கமுடியாது. எனவே, அரசு இதை மீண்டும் பரிசீலித்து நவோதயா பள்ளிகளை தமிழகத்திலே மத்திய அரசு உதவியோடு துவக்க....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பரிசீலிக்கச் சொல்கிறீர்கள்? மீண்டும் இந்தியைத் திணித்து விடலாமா என்று பரிசீலிக்கச் சொல்கிறீர்களா?

**திரு. வி.கே. லட்சுமணன்:** இந்த மாமன்றத்திலேகூட இந்தியிலே பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு கொடுக்கின்ற அந்த

*1996 பிப்ரவரி 23]*

உதவித் தொகையை இழந்து நல்ல கல்வியை, தரமான கல்வியை இழப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த நாட்டைப் பொறுத்த மட்டிலே, இங்கு இந்தியும் வேண்டாம், இந்தி வேண்டும் என்கிறவர்களும் வேண்டாம் என்பதுதான் முடிந்த முடிவு.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்களுக்கு இந்தியின் மீது இருக்கிற பற்றை நான் நல்லமுறையிலே தெரிந்துகொண்டிருக்கிறேன். இதற்கு முன்னாலே மானியக் கோரிக்கையிலேகூட கல்லூரிகளிலே கட்டாயமாக அரசு இந்தி கற்றுத்தரவேண்டும் என்று அவர்கள் இங்கே ஒரு குறிப்பைச் சொன்னார்கள். அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை நாம் உணர முடிகிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் இந்தியை என்றைக்குமே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் இந்தி கற்றுத் தரப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் கனிவோடு சொல்லிக் கொள்வேன், அரசு மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை நடத்துவதில்லை. தனியார் இந்தி கற்றுத் தருவதை இந்த அரசு தடைசெய்வதில்லை. இந்தி பிரச்சார சபா இருக்கிறது. இந்தி பிரச்சார சபாவை அரசு மூடிவிட்டதா? தனியார் அவர்களாகக் கற்றுத் தருவதை அரசு தடுக்கவில்லை. ஆனால் அரசு ஒரு முயற்சி எடுத்து இந்தியை பிறர் மீது திணிக்காது என்ற கொள்கையில் உறுதியாக இருக்கிறது. (குறுக்கீடு) துணைக் கேள்வி கேட்பவர் ஒரு கேள்வி தான் கேட்க முடியும். நவோதயா பள்ளிகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். நவோதயா பள்ளிகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்த மாநிலத்திற்கு ஏற்ற முறையில் மொழிக் கொள்கையை மத்திய அரசு ஒப்புக் கொள்ளுமேயானால் தொடங்குவதற்கு அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. ஆனால் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுத்தர வேண்டுமென்று நிபந்தனை இருப்பதால்தான் இங்கே இப்பள்ளிகள் தொடங்கப்படவில்லை. மத்திய அமைச்சரை ஒரு முறை சந்தித்தபோதுகூட அவர்கள் கேட்டார்கள். தமிழகத்திற்கு வரவேண்டிய நிதி வராது என்று சொன்னார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் நிதியைப் பற்றிக் கவலைப்படவில்லை. தமிழக மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நீதியைப் பற்றித்தான் கவலைப் படுகிறார்கள் என்று தெரிவித்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். ஆகவே, இந்தியைத்

திணிப்பதற்கு எந்தவகையில் முயற்சி எடுக்கப்பட்டாலும் அதை இந்த அரசு முறியடித்தே தீரும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ் படிக்காமல் யாரும் பட்டம் பெறக்கூடாது என்று சொன்னதன் அடிப்படையில் இப்போது ஒரு ஆணையிட்டிருக்கிறோம். நர்சரி பள்ளிகளிலே தமிழ் கட்டாயமாகக் கற்பிக்கப்படவேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். சிறுபான்மை மொழியைக் கற்கிறவர்கள் தமிழைக் கட்டாயமாகக் கற்கவேண்டுமென்று நிபந்தனை போடப்படும்போது அவர்கள் அரசமைப்புச் சட்டத்தைச் சொல்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற அடிப்படை உரிமையைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆக, இவற்றையெல்லாம் கலந்தாலோசித்து, அரசு தமிழை முழுமையான பயிற்று மொழி ஆக்குவதற்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்டு, இப்போது தமிழ் வளர்ச்சி மன்றக் கூட்டம் மாண்புமிகு நாவலர் அவர்கள் தலைமையிலே நடைபெற்றபோது, மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ச் சான்றோர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே தமிழைக் கட்டாயமாக அனைவரும் படிப்பதற்கான வாய்ப்பை எப்படி உருவாக்குவது என்பதற்கான ஆலோசனைகளைக் கேட்டிருக்கிறோம். அறிக்கை வந்தவுடன் அரசு தேவையான முயற்சியை மேற்கொள்ளும். இந்தியைக் கட்டாயமாக எல்லா இடங்களிலும் கொண்டு வருவதற்கான முயற்சியை எந்த உறுப்பினர் மேற்கொண்டாலும் ஏற்க முடியாது. இங்கே சொன்னாரே, சட்டமன்றத்திலேகூட இந்தியிலே பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்று; உரிமை இருக்கிறது; ஆனால், அனைத்து உறுப்பினர்களும் இந்தியிலேதான் பேச வேண்டுமென்று ஆணையிட முடியாது. ஆகவே, அதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, தமிழை அனைவரும் படித்தாக வேண்டுமென்ற நிலையை அரசு விரைவில் உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில், இந்தியில் பேசலாம் என்பது, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர், இங்கே உறுப்பினராக வந்துவிட்டால் அவ்வாறு பேசுவதற்கு உரிமை உண்டு. அந்த உரிமை, தமிழைத் தாய்மொழியாக ஏற்று இருக்ககிற உறுப்பினர், நாளைக்கு உத்தரப்பிரதேசத்திற்குப் போனால், அங்கே இருக்கிற சட்டமன்றத்திலோ, அங்கே இருக்கிற அரசு அலுவலகங்களிலோ, நிறுவனங்களிலோ, கல்வி நிலையங்களிலோ தமிழைப் பயன்படுத்த முடியாது. அந்த அளவுக்கு

*1996 பிப்ரவரி 23*]

இரண்டாந்தரக் குடிமகனாக ஆக்குகிற சட்டம், இன்றைக்கு இந்தியாவிலே, மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அடுத்து, வினா எண் 114, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 115, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

ஒவ்வொருவருக்கும் இனிமேல் ஒரு துணைக் கேள்விதான், நேரமாகிவிட்டது.

**115--**

**ஊராட்சிகள் அமைத்தல்**

**39977*--**திரு. கே. செல்வராஜ்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கோயம்புத்தூர், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கூடலூர் நகரப் பஞ்சாயத்து ஆகியவற்றைப் பிரித்து கவுண்டம்பாளையம் ஊராட்சியாகவும், தெற்குபாளையம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு மற்றொரு ஊராட்சியாகவும் பிரிக்க அரசு திட்டமிட்டு உள்ளதா?*

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கூடலூர் பேரூராட்சி ஆகியவற்றைப் பிரிக்கவோ, கவுண்டம்பாளையம் மற்றும் தெற்குப்பாளையம் ஆகிய ஊராட்சிகள் அமைக்கவோ அரசிடம் திட்டம் இல்லை.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூடலூர் நகரப் பஞ்சாயத்து என்பது, 20 ஆயிரம் வாக்குகள் கொண்ட, பெரிய பஞ்சாயத்து. அதனுடைய பரப்பளவும் சுமார் 20 கிலோமீட்டர் தூரம். கவுண்டம்பாளையம் என்ற ஊரிலிருந்து, தெற்குப்பாளையம் என்ற ஊருக்கு, பெரியநாயக்கன்பாளையத்தைச் சுற்றி வருவதற்கு 20 கிலோமீட்டர் தூரம்கூட வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளதால்,